# நிலவை மறைத்த சுடர்



Pax Ravichandra

+94763223960

pax.ravichandra@gmail.com

9-11-2024

| நிலவை மறைத்த சுடர் | |
|---|---|
| எண் | பொருளடக்கம் |
| 1 | அழகிய நட்பு |
| 2 | பிரித்தானிய ஏகாதிபத்தியம் |
| 3 | காதல் மழை |
| 4 | காதல் பிரசாதம் |
| 5 | நிலவை மறைத்த சுடர் |
| 6 | தீப ஒளித் திருநாள் |

# அழகிய நட்பு





அன்பினால் என்னை இன்புற வைத்த
அழகிய நட்பு- ஆண்டுகள் பல போனபின்பும்
சந்தனமாய் மணக்கும் இனிய நற்பண்பு
தம்பதியராய் என்னை வாழ்த்திய பேரன்பு

கல்லூரியின் இனிய நினைவுகளை
இதயம் மீட்ட, கனவான காலங்களை
எண்ணி மனம் கானம் பாட
உறவு சொல்லி வந்த உன்னத நட்பு

அன்பினால் இன்புற்ற மனம்-இறை தந்த
அரிய உறவென்று இறைபுகழ் பாடும்
நட்பினால் விரும்தோம்பிட என்னைத்
தேடி வந்த உறவு கண்டு விழிகள்
ஆனந்தக் கண்ணீர் சொரியும்

தாயாய், தந்தையாய் என்னை
அன்பு செய்த உறவு-ஜெகன் கலா
நட்பால் உள்ளம் உதயம் கண்டு-இதயம்
மகிழ்ந்து தாமரையாய் மலர்ந்த நிகழ்வு

மஞ்சளும், குங்குமமும், கார்குழலில் மல்லிகையும்
நிலைக்க, வாழ்வில் மங்கலம் பொங்கிட
அன்பினால் இன்புற்று இருவரும் இறையன்பில் வளர
பல்லாண்டு வாழ்க என வாழ்த்தும் நண்பன்

கண்டுதான் இதயம் கானக்குயிலாய் பாட
அன்பினால் இன்புற்று கலாமயிலாய் மனம் ஆட
காணக்கிடைக்காத அரிய நட்போ சங்கநிதி
கண்டு கூத்தாடும் அன்பு மனதில் குபேரநிதி





முத்தாரம் சிரிக்கின்ற
சிரிப்பல்லவோ

முழு நெஞ்சைத் தொடுகின்ற
நெருப்பல்லவோ

நெஞ்சோடு நீசேர்த்த
பொருளல்லவோ


எந்நாளும் பிரியாத
உறவல்லவோ

**இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க**
**எல்லாப் புகழும் இறைவனுக்கே**

Pax Ravichandra-6-11-2024

# பிரித்தானிய ஏகாதிபத்தியம்


Lida Thorpe was escorted out by security after she heckled King Charles




பிரித்தானிய ஏகாதிபத்தியச் சிலந்தி உலகை விழுங்கிட
வலை பின்னிய நேரம், முடியிழந்து மன்னர்கள் வாட,
அடிமைகளாய் உரிமைக் குடிமக்கள் மனஞ்சோர,
இண்ட காலம், இன்றும் நிலைத்த எதேச்சதிகாரம்

யூனியன் ஜாக் கொடி உயரப் பறந்திட- வல்லமையால் உலகின்
பெரும் பகுதியை அடிமையாக்கி, வளங்களைச் சூறையாடி
உருவான சூரியன் மறையாத பிரித்தானிய சாம்ராஜ்சியம்
காலனித்துவ ஆட்சியால் நிலைத்த ஏகாதிபத்தியம்

ஆண்ட பரம்பரை அடிமைகளாகப்-பிரித்தாளும்
சூழ்ச்சியால் வெற்றி கொண்ட வெள்ளையர் தந்திரம்
பூர்வீகக் குடிகளோ, குடிமகனாய்ப் போதையில் தள்ளாட
மன்னன் துதிபாடும் வெள்ளைக் குடியேறிகளின் வேசித்தனம்

குற்றவாளிகளை நாடு கடத்தி, திறந்த வெளி
சிறைக்கூடமான பூமி, சுதந்திரக் குடிமக்களை
வெற்றி கொண்டு, போதைக்கு அடிமையாக்கி-முடி
சூடிய சாமி, கிறிஸ்தவன் நான் என்ற பேமானி

நீ எங்கள் அரசனுமல்ல, இது உன் நாடுமல்ல
பிரித்தானிய மன்னன் சார்ள்ஸ்க்கு எதிராய்
எழுப்பிய பெண் செனட்டரின் சுதந்திரக் கோஷம்
காலத்தால் ஆறாத காயங்களின் ஆக்ரோஷம்

தன் பூர்வீக குடிகளின் உரிமை குரலாய் செனட்டரின் எதிர்ப்பு
காலனித்துவ ஆட்சியதிகாரம், பூர்வீகக் குடிகளின் உரிமை மறுப்பு,
வரலாற்றில் இழைத்த வன்முறைக் கொடுமை, நில ஆக்கிரமிப்பு,
கலாச்சார மறுப்பு, இரண்டாம்தர பிரஜைகளான அவமதிப்பு-




இரத்தம் கொதிக்க ஓங்கி ஒலித்த குரலோ
சுதந்திரத்தின் எதிரொலி-வெள்ளையன் முடியாட்சிக்கு
மண்டியிட மறுத்த வளையாத வீரத்தின் சங்கொலி

போர் முரசு கொட்டிய கோதை-நீதிக்காய்
உலகின் மனச்சாட்சியை தட்டி எழுப்பிய தேவதை
உண்மைக்குப் பிரமாணிக்கமான மங்கை-ஆளும்
அரசியலமைப்பை புறந்தள்ளிப் போராடும் வீரநங்கை

Lida Thorpe

***எல்லாப் புகழும் இறைவனுக்கே***

***இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க***

*Pax Ravichandra-22-10-2024*

An Aboriginal senator raising her voice against King Charles likely stems from ongoing tensions related to colonialism, Indigenous rights, and Australia's relationship with the British monarchy. Some Indigenous Australians view the monarchy as symbolic of the colonization and historical injustices faced by their communities, including land dispossession, marginalization, and cultural erasure.

Since King Charles became the British monarch, conversations around Australia's constitutional monarchy, republicanism, and Indigenous sovereignty have intensified. Indigenous leaders, including politicians, may voice opposition to the monarchy, demanding recognition of their history and the lingering effects of colonization. Their criticism might also focus on the lack of reparations or meaningful reconciliation for the historical wrongs committed under British rule.

Some Aboriginal activists advocate for severing ties with the monarchy altogether, favoring an Australian republic that recognizes Indigenous peoples' rights and sovereignty.

# காதல் மழை

கண்களில் கார்கால மழை
பூ நெஞ்சுக்குள் சுனாமியின் ஓயாத அலை
துண்டு துண்டாய் உடைந்த இதயம்
காணாமற்போன என்தன் காதல் வசந்தம்





சோடிக்குயில்களாய் பாடியபோது வாழ்வில்
தேன்மழை, ஒற்றைக்குயிலாய் கரையும்போது
நெஞ்சுக்குள் சோகமழை, காதல் மழையில்
கலாபங்கள் ஆடிய நடனம்-ஆனந்தத் தாண்டவம்

உடைந்த காலும்,
முறிந்த தோகையுமாய் இன்றோ
என்தன் பாவம்- மனதில்
முகாரியின் ஓயாத ஆலாபனம்

கண் மறைந்தாலும் நெஞ்சுக்குள் உலவும்
தேன்நிலவாய் அவள் நினைவு
ஏழ்கடல் பிரித்தாலும் ஓயாத
அலையோசையாய் அவளின் இன்ப உறவு



ஏனடி என்னைப் பிரிந்தாய்? எதற்கடி
என்னை மறந்தாய்?- அன்று தேனாய் இனித்த உறவு,
இன்று தேளாய் கொட்டும் உன் பிரிவு, நிலவிழந்த
வானாய் அழகிழந்து துடிக்கும் என்தன் காதல் மனது

பாடி அழைத்தும் பதில் கொடாத
சோடிக்குயில், ஆடி களைத்தும்
ஆட வராத கலாபமயில்-என் நெஞ்சிலே
ரணம், நினைவிலே வடியும் உதிரம்

அழுது சிவந்த விழிகளில் அழக் கண்ணீரில்லை
தொழுது, தொழுது வளர்த்த காதல்
தொலைந்து போனதில் உன்னைச் சொல்லிக்
குற்றமில்லை, ஏங்கும் மனதில் அமைதியில்லை, எங்கே
நிம்மதி? எங்கே நிம்மதி ?மனதில் கேள்வி ஓயவில்லை

காலங்கள் போனாலும் கலையாத வசந்தம்
மாதங்கள் ஆனாலும் நெஞ்சில் மறையாத காதலோ
சுகந்தம், பூத்து மணக்கும் வாசமல்லிகை, சுவைக்கத்
திகட்டாத காதல் மாங்கனி என்தன் காதலி



என் கண்களில் கங்கையின் ஈரம்
நெஞ்சுக்குள் கலையாத இருளாய்ச் சோகம்
இதயத்தில் இமயப்பாரம்-ஏன் படைத்தாய்
இறைவா மனதில் காதலின் ஆதங்கம்

உதயம் காணாத நாட்கள்- உலா வரும்
நிலவைக் காணும்போதெல்லாம் கனக்கும் நெஞ்சம்,
கண் மறைந்த என் பொன்வசந்தம், சுவாசத்தில்
இன்றும் நிலைத்த அவள் சுகந்தம்

பூவிழியாள் நெஞ்சைக் கொத்திய காதல்
மரங்கொத்தி, முத்துப் புன்னகையால் இதயத்தை
திருடிச் சென்ற காதல் மீன்கொத்தி எங்கே?
துடிக்கும் இதயம் கேட்டுத் தவிக்குது இங்கே



காதல் தேவதை என்று களிப்பில் மனம் பாட
கவிதை விடு தூதாய் நிலை மாற
பொன்னால் வடித்தானோ பிரம்மன்-இல்லை
பூவால் தொடுத்தானோ பூச்சரமாய் அழகை

மதிமுகம், பிறை நுதல், மையளாவிய விழிகள்
மதுமலர்க் கூந்தல், கொடி இடை, கொவ்வைச் செவ்வாய்,
மயக்கும் முத்துப் புன்னகையோ மோகனம்
மலர்மேனி வீசிடும் நறுமணம், மயங்கியதே என் மனம்



என் மனதை மயக்கிய கோமளம்-இன்றும்
நெஞ்சில் மணக்கும் காதல் பரிமளம்
காளை மனதில் அன்று காதல் விழிக்கப் பாடிய
கன்னியின் பூபாளம், இன்று தேவதாஸாய்
நெஞ்சு துடிக்க நான் பாடும் முகாரி ராகம்

நாணத்தால் காதல் சொன்ன மங்கை, கானத்தால்
கலாபமயிலாய் ஆடிய மனதிலோ காதல் கங்கை
கிட்டாது என்றாலும் காதல் முரசு கொட்டிய என்
மனசு,காதலாகி தன்னைத் தந்த கன்னி மனசு

உன்னைச் சொல்லிக் குற்றமில்லை-என்னைச்
சொல்லிக் குற்றமில்லை, காலம் செய்த
கோலமடி, கடவுள் செய்த குற்றமடி

**இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க**
**எல்லாப் புகழும் இறைவனுக்கே**
*Pax Ravichandra-31-10-2024*

# காதல் பிரசாதம்

கானக்குயிலாய் பாடி அழைத்து, தோகை மயிலாய்
ஆடிக் கவர்ந்து, அஞ்சுகமாய் கிள்ளைமொழி பேசி-என்
நெஞ்சைக் கொத்திய காதல் மரங்கொத்தி
காதலாகி என் இதயத்தை கவ்விப் பறந்த
வண்ண மீன் கொத்தி இவள்தானா?






மையளாவிய விழிகள், மதிமுகம்,நெய் தடாவிய
கார்குழலில் மலர்கள்,பிறை நுதலில் திலகம், கயலோ?,
வேலோ? என்னும் விழிகளில் காதலின் பாவம்
என் நெஞ்சிலே காதலின் உற்சவம்

செங்கனிவாயில் திகட்டாத காதலின் பாசுரம்
கனவிலும் என் நெஞ்சை இன்பமாய் வருத்தும்
காதல் சுரம், கண்களால் என்னைக் கொய்து
காதலால் என்னைச் சூடிய கன்னியோ மதுரசம்

பங்கய முகத்தாள் மேனியில் பரிமள வாசம், வாச
மல்லிகையாய் என்னைச் சூடிய மனதில் ஆனந்தம்,
இதயத்தை பற்றிப் படர்ந்த காதல் முல்லை
எந்நாளும் காதல் மணம் வீசும் ரோஜாவாய்க் கிள்ளை

குவளை விழிகளில் காதல் தேன், கொஞ்சும்
மொழிகளில் நெஞ்சம் சுவைக்க மலைத்தேன்,
பவளவாயில் அமுதைச் சுவைத்து
பரிமளத்தை முகர்ந்திட என்னை மறந்தேன்



காதல் நர்த்தனம் ஆடும் தோகை,
கானக்குயிலாய் கீதம் பாடும் மங்கை
கொஞ்சி மகிழும் அஞ்சுகம் -காதலாகிச்
சுவைக்க இறைவன் தந்த பெருஞ்சுகம்

காதல், காதல் என்று மனம் கவி பாட
கன்னியழகோ என்னை கவிஞனாக்கிட
தொட்டுத் தழுவும் பூவிழிகளில் புது வசந்தம்
நித்தம் என்னை கொஞ்சி மகிழ
கன்னியோ கடவுள் தந்த காதல் பிரசாதம்

**இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க**
**எல்லாப் புகழும் இறைவனுக்கே**
*Pax Ravichandra-20-10-2024*

# நிலவை மறைத்த சுடர்



வெள்ளி அலைகள் துள்ளி விளையாடும்-வீசு தென்றல்
பள்ளி கொண்ட புள்ளினங்களுக்கு சாமரம் விசும்
இனிக்கும் இன்ப இரவில் நடைபயிலும் கங்கை நதி
சீதள ஒளி சிந்தி வானிலே தவழும் பால் வண்ண மதி



வளைந்து நெளிந்து ஓடும் கங்கையில்
உல்லாசமாய் மிதந்திடும் படகு வீடு-மெழுகுதிரி
வெளிச்சத்தில் படித்த நூலோ அறிவுக்கு விருந்து
கவி மனதல் நிலைத்த ஆனந்தமோ தேன்கரும்பு

இருள் பூத்த இரவில்-நடைபோடும் கங்கை,
கரைமோதி அலைகள் கொட்டும் இன்னிசையில்
சப்தசுரங்களின் ஆலாபனை, இருளும், ஒளியுமான
உலகோ ஞானியருக்குப் பழமுதிர்ச்சோலை

படித்துச் சுவைத்த நூலை பக்கம் வைத்து,
எரியும் திரியை ஊதி அணைத்து உறங்க விழைந்த மனம்,
சாளரம் வழியே எட்டிப் பார்த்த பால் நிலா
அறையெங்கும் வெண்ணிலவின் வண்ணத் திருவிழா



சுந்தரமான நிலவொளி சுற்றிப் படர,
பரிசுத்தமான நிலவழகு மனதை ஸ்பரிசிக்க
திரி மறைத்த அழகு, திரி அணையத் தோன்றிய
நிலவு, மனம் களிக்க இறை புகழ் பாடிய மனது



அறிவாய் ஒளிரும் ஆணவ ஒளியோ எரியும்
மெழுகு திரி, ஆணவம் அணைந்திட, இருப்பாய்
ஒளிரும் தூய மனம் பேரானந்தம்
தூய மனத்தவருக்கே சத்திய தரிசனம்
எளிய மனத்தவருக்கே இறையரசு

ஆணவம் கழியத் தோன்றும் தூய மனமே
ஏதேன் வனம், இறைவன் உலாவிடும் இன்பவனம்
ஆதிப்பெற்றோருக்கு இறையளித்த இல்லம்,
அறம், பொருள், இன்பம் நுகரும் தூய உள்ளம்

நெளிந்து வளைந்தோடும் நதியோ நிர்மலம்
ஆணவம், கன்மம், மாயை என மும்மலம் நாறிடும்
ஆணவ மனமோ கேவலம், அறிவைக் கழித்து
தேர்வைத் துறந்திட நம் இருப்போ ஆனந்தம்





இரவும் நிலவும் உறவாடும் அழகோ பேரழகு
இருவிழி கடந்து, இருமை துறந்திட,
தேர்வு மறைந்திட தவமான பொழுது-தவமின்றி
வரமில்லை, இறை கருணைக்கு எல்லையில்லை

நிலவொளியில் தெரிந்த இயற்கை அழகு
நிர்மலமான இதயம் பார்த்துப் பூரிக்கச் சிரித்த நிலவு
உலாவும் மேகம், ஒளிரும் விண்மீன், ஓடும் நதி
ஒளியும், இருளுமாய் இருப்பின் விதி

இடை நெளிய, நடை நாட்டியமாக,
இருபுறமும் வானுயர்ந்த சோலை வாழ்த்திட
கடல் நோக்கி நடைபோடும் கங்கை
இருப்பை நோக்கிய பயணமாய் வாழ்க்கை

தரைகொட்டி அலைகள் களிப்பைச் சொல்ல
இலை தூவி மரங்கள் வாழ்த்துக் கூற
நாட்டியமாய் நடைபோடும் கங்கை, கண்ட
கவி மனதிலே வைகையாய் பொங்கிடும் பேருவகை



கடல் நோக்கிப் பாயும் கங்கைக்கு
உந்து சக்தியாய் கங்கோத்திரி, நதியின்
இருப்போ புனிதம், கவி தாகூரின் மனதில்
கீதாஞ்சலியின் உதயம்

உருகி ஒளிரும் மெழுகுவர்த்தி ஒளியில்
நள்ளிரவில் விழித்திருந்து படித்த நூலோ
சுகந்தம், ஊதி அணைத்திட, நிலவின்
வருகையால் கண்ட காட்சியோ அற்புதம்

ஒளிரும் மெழுகுதிரி மறைத்த பேரழகு
ஒளியிழந்து அணைந்திட புலர்ந்த இராப்பொழுது
பால் நிலவால் மனதில் பரவசம்-சிறிய மெழுகு
பேரழகை மறைத்ததே என்னே அதிசயம்!



மெழுகும், நிலவும் ஒளி முதல்கள்
பெரிதைச் சிறிது மறைத்த ஆணவ மனதின்
அறியாமை நிலைகள், ஆணவத்தை அணைத்திட
தோன்றிய அழகில் சச்சிதானந்த நிலைகள்

இரவும், பகலும் இயற்கையின் அலைகள்
நேரும், எதிருமாய் சக்தியின் நிலைகள்
இருமையாய்த் தோன்றும் திரையோ மாயையின் கூடு
இருமை கடந்தால் அடைவதோ பேரின்ப வீடு



நிலவொளியில் விழி கண்ட அதிசயம்
வான் பூத்த மதுமலரோ அற்புதம்,
மனம் அறிந்த இரகசியம்,
தூய மனத்தவருக்கே சத்திய தரிசனம்

வானிலே மேகங்களின் ஆனந்த ஊர்வலம்
காற்றிலே சலசலக்கும் இலைகளின் கீர்த்தனம்,
கரையிலே சலங்கை ஒலியாய் அலைகளின் ஆலாபனம்
கவி நெஞ்சுக்குள் புது விடியலின் பூபாளம்



சிறு சுடரே, சுந்தரச் சுடரை மறைத்த அதிசயம்,
அறிவு மனம் கழிய, அன்பு மனம் விழிக்க, பிறக்கும்
ஆனந்த நர்த்தனம், நம்மிலே ஒளிரும் இருப்போ
சத்தியம், சிவம், சுந்தரம்

Upon a boat, a poet reads,
By candle's glow, where soft light leads.
A book unfolds in whispers low,
Yet moonlight's touch, he does not know.

The lake lies still, the night serene,
A silvered world, in moon's bright sheen.
But ego's flame, his narrow sight,
Shields his gaze from truer light.

'Til weary eyes, at last, he yields,
And snuffs the flame his hand did wield.
In sudden dark, the world expands,
Moonlight spills from heaven's hands.

So, too, the self we often hide
With walls of pride, with light inside.
Only when we dim our might,
The true self blooms in silent night.

**இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க**
(லோக சமஸ்தா சுகினா பவந்து)
**எல்லாப் புகழும் இறைவனுக்கே**
*Pax Ravichandra-20-10-2024*

# தீப ஒளித் திருநாள்

ஒளி உண்டாகுக-இறைவனின்
முதல் வார்த்தை-இருளை
அழித்து ஒளிர்ந்த வார்த்தையோ
மனுவுருவான அன்பின் கீதை




எரிந்தும் எரியாத முட்செடியில்
சக்தியும், சடமுமாய் இருப்பின் தரிசனம்
இருப்பவர் நாமே-இருப்பின் நாமம்
அறிந்த மோஸே மனதில் ஆனந்தம்



சக்தியுமல்ல, சடமுமல்ல
இருப்பற்ற இருள்-அறிவுக்கனியால்
வந்த மருளாய் ஆணவம்

ஒளியாய் இறைவன், இருளாய் அரக்கன்
ஆணவமனம் அழிய, நம்மில் தோன்றும்
தூய மனமே நம் மெய் இருப்பு
அதுவாய் நாம்- அஹம்பிரமஸ்மி-தத்துவமஸி

இறையில்லமாய் நம் உள்ளம்
அதுவே இரண்டாம் பிறப்பு
நம் வாழ்வோ ஒளியில் நிலைப்பு

நமக்கு நாமே ஒளியாகிப் போக-உண்மையின்
ஒளி நம்மில் ஒளிர, அன்பில் நிலைத்து-
இன்பமே சூழ்க எல்லோரும் நலம் வாழ
வாழ்த்தும் தூய மனம் சச்சித்தானந்தம்

உலகின் ஒளி நீங்கள்,
உங்கள் ஒளி ஒளிர்வதாக
உலகின் உப்பு நீங்கள்-வாழ்வால்
உலகைச் சுவையூட்டுங்கள்

தூய மனத்தவருக்கே சத்திய தரிசனம்
எளிய மனத்தவருக்கே இறையரசு
உன்னதங்களில் இறைவனுக்கு மகிமை-பூவுலகில்
நல்மனத்தவருக்கு அமைதி- இயேசு பிறப்பின் நற்செய்தி

**இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க**
**எல்லாப் புகழும் இறைவனுக்கே**
*Pax Ravichandra-01-11-2024*